குரூப் 2A Mains – தினசரிப் பயிற்சி 20 (21 நவம்பர் 2026)

21-11-2026 · https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-2-2a-mains

வினாக்கள்

1. ஹொய்சாளர் கலை குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. ஹொய்சாளர்களின் தலைநகர் துவாரசமுத்திரம் (இன்றைய ஹளேபீடு).
2. பேலூர் சென்னகேசவர் கோயிலைக் கட்டியவர் விஷ்ணுவர்த்தனன்.
3. பேலூர், ஹளேபீடு, சோமநாதபுரம் கோயில்கள் "ஹொய்சாளர்களின் புனிதக் கட்டடத் தொகுப்புகள்" என்ற பெயரில் 2023-இல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டன.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

2. கூற்று (A): எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் ஒரே பாறையில் குடைந்த (ஒற்றைக்கல்) கோயில் ஆகும்.
காரணம் (R): அக்கோயில் ஒரே மலைப்பாறையை மேலிருந்து கீழாகச் செதுக்கி உருவாக்கப்பட்டது.

A. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம்
B. (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம் அல்ல
C. (A) சரி; ஆனால் (R) தவறு
D. (A) தவறு; ஆனால் (R) சரி

3. பிரம்மஞான சபை (Theosophical Society) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. இச்சபை 1875-இல் சென்னை அடையாற்றில் தொடங்கப்பட்டது.
2. 1882-இல் இச்சபையின் தலைமையகம் சென்னை அடையாற்றுக்கு மாற்றப்பட்டது.
3. அன்னி பெசன்ட் 1907-இல் இச்சபையின் தலைவரானார்.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

4. தமிழ்நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களை (பட்டியல் I) அவர்கள் பிறந்த ஊர்களுடன் (பட்டியல் II) பொருத்துக:

(a) வ.உ. சிதம்பரனார் – 1. சென்னிமலை

(b) சுப்பிரமணிய பாரதியார் – 2. செங்கோட்டை

(c) வாஞ்சிநாதன் – 3. ஒட்டப்பிடாரம்

(d) திருப்பூர் குமரன் – 4. எட்டயபுரம்

A. (a)-4, (b)-3, (c)-2, (d)-1

B. (a)-3, (b)-4, (c)-2, (d)-1

C. (a)-3, (b)-4, (c)-1, (d)-2

D. (a)-2, (b)-4, (c)-3, (d)-1

5. காந்தி – இர்வின் ஒப்பந்தம் குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:

1. இது 1931 மார்ச்சில் கையெழுத்தானது.

2. இதன்படி காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி, இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்க ஒப்புக்கொண்டது.

3. இதன்படி பகத் சிங்கின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்

B. 1 மற்றும் 2 மட்டும்

C. 2 மற்றும் 3 மட்டும்

D. 1, 2 மற்றும் 3

6. அரசியலமைப்புப் பிரிவுகளை (பட்டியல் I) அவற்றின் பொருளுடன் (பட்டியல் II) பொருத்துக:

(a) பிரிவு 243K – 1. தாய்மொழியில் தொடக்கக் கல்வி

(b) பிரிவு 300A – 2. மாநிலத் தேர்தல் ஆணையம்

(c) பிரிவு 338 – 3. சொத்துரிமை (சட்ட உரிமை)

(d) பிரிவு 350A – 4. பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையம்

A. (a)-2, (b)-4, (c)-3, (d)-1

B. (a)-2, (b)-3, (c)-4, (d)-1

C. (a)-1, (b)-3, (c)-4, (d)-2

D. (a)-3, (b)-2, (c)-4, (d)-1

SHANMUGAM IAS ACADEMY
www.shanmugamiasacademy.in

7. மண்டலக் குழுக்கள் (Zonal Councils) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. இவை 1956 மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் அமைந்த சட்டபூர்வ அமைப்புகள்.
2. ஒவ்வொரு மண்டலக் குழுவுக்கும் பிரதமர் தலைவர்.
3. வடகிழக்கு மாநிலங்கள் இந்த ஐந்து மண்டலக் குழுக்களில் ஒன்றில் உறுப்பினர்கள்.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

8. பணக் கொள்கைக் குழு (Monetary Policy Committee) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. இது 2016-இல் திருத்தப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் கீழ் அமைந்தது.
2. இதில் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர்.
3. வாக்குகள் சமமாக இருந்தால் ரிசர்வ் வங்கி ஆளுநருக்கு இரண்டாவது (தீர்மான) வாக்கு உண்டு.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

9. அலுவல் மொழி குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. பிரிவு 343-இன்படி ஒன்றியத்தின் அலுவல் மொழி தேவநாகரி எழுத்தில் உள்ள இந்தி.
2. அலுவல் நோக்கங்களுக்கான எண்கள் இந்திய எண்களின் பன்னாட்டு வடிவம்.
3. எட்டாம் அட்டவணையில் தொடக்கத்திலேயே 22 மொழிகள் இருந்தன.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

10. ஒரு மாநில ஆளுநர் தொடர்பான பின்வருவனவற்றில் தவறானது எது?

A. ஆளுநரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்
B. ஆளுநர் குடியரசுத் தலைவர் விரும்பும் வரை பதவியில் இருப்பார்
C. ஆளுநர் பதவிக்குக் குறைந்தபட்ச வயது 30
D. ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக இருக்கலாம்

11. ஆதித்யா-L1 குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. இது PSLV ஏவுகலம் மூலம் 2023 செப்டம்பரில் ஏவப்பட்டது.
2. L1 புள்ளி பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ளது.
3. இது சூரியனை ஆய்வு செய்யும் இந்தியாவின் முதல் விண்வெளி ஆய்வகம்.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

12. சந்திரயான்-3 குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. நிலவில் மென்தரையிறக்கம் செய்த உலகின் முதல் நாடு இந்தியா.
2. இது 2023 ஆகஸ்ட் 23 அன்று நிலவின் தென்துருவப் பகுதிக்கு அருகே தரையிறங்கியது.
3. அதன் தரையிறங்கி (lander) விக்ரம், உலாவி (rover) பிரக்யான்.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

13. கூற்று (A): O நெகட்டிவ் இரத்த வகையினர் "பொதுக் கொடையாளர்" (universal donor) எனப்படுகின்றனர்.
காரணம் (R): O நெகட்டிவ் சிவப்பணுக்களில் A, B எதிர்ப்பொருள் தூண்டிகளும் (antigens) Rh(D) தூண்டியும் இல்லை.

A. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம்
B. (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம் அல்ல
C. (A) சரி; ஆனால் (R) தவறு
D. (A) தவறு; ஆனால் (R) சரி

14. மனித இரத்தத்தின் இயல்பான pH மதிப்பு ஏறத்தாழ எவ்வளவு?

A. 6.4
B. 7.0
C. 7.4
D. 8.4

15. குறைகடத்திகள் (semiconductors) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. சிலிக்கான் ஒரு குறைகடத்தி.
2. சிலிக்கானில் பாஸ்பரஸைக் கலந்தால் (doping) n-வகைக் குறைகடத்தி கிடைக்கிறது.
3. வெப்பநிலை உயர்ந்தால் குறைகடத்தியின் மின்தடை அதிகரிக்கிறது.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

16. சரக்கு, சேவை வரி மன்றம் (GST Council) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. இது பிரிவு 279A-இன் கீழ் அமைந்தது.
2. மத்திய நிதியமைச்சர் இதன் தலைவர்.
3. முடிவுகளுக்கு மூன்றில் நான்கு பங்கு எடையுள்ள பெரும்பான்மை தேவை; மத்திய அரசின் வாக்குக்கு மூன்றில் ஒரு பங்கு, மாநிலங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு எடை.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

17. முன்னுரிமைத் துறைக் கடன் (Priority Sector Lending) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. உள்நாட்டு வணிக வங்கிகள் தங்கள் சரிசெய்த நிகரக் கடனில் (ANBC) 40%-ஐ முன்னுரிமைத் துறைக்கு வழங்க வேண்டும்.
2. வேளாண்மை முன்னுரிமைத் துறையின் ஒரு பகுதி.
3. கல்விக் கடன்களும் முன்னுரிமைத் துறையில் அடங்கும்.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

18. பின்வருவனவற்றில் நேர்முக வரி (direct tax) அல்லாதது எது?

A. வருமான வரி
B. நிறுவன வரி (Corporation tax)
C. சரக்கு, சேவை வரி (GST)
D. பங்குப் பரிவர்த்தனை வரி (STT)

19. நிறுவனங்களை (பட்டியல் I) அவற்றின் தலைமையகங்களுடன் (பட்டியல் II) பொருத்துக:

(a) SIDBI – 1. மும்பை

(b) தேசிய வீட்டுவசதி வங்கி (NHB) – 2. ஹைதராபாத்

(c) IRDAI – 3. லக்னோ

(d) NABARD – 4. புது தில்லி

A. (a)-3, (b)-4, (c)-2, (d)-1

B. (a)-3, (b)-2, (c)-4, (d)-1

C. (a)-1, (b)-4, (c)-2, (d)-3

D. (a)-4, (b)-3, (c)-2, (d)-1

20. கூற்று (A): வரும் பத்தாண்டுகளில் இந்தியா மக்கள்தொகை ஈவைப் (demographic dividend) பெறும் வாய்ப்பு உள்ளது.

காரணம் (R): மொத்த மக்கள்தொகையில் உழைக்கும் வயதினரின் (15–64 வயது) பங்கு உயர்ந்து வருகிறது.

A. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம்

B. (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம் அல்ல

C. (A) சரி; ஆனால் (R) தவறு

D. (A) தவறு; ஆனால் (R) சரி

21. கடகரேகை (Tropic of Cancer) பின்வரும் எந்த மாநிலம் வழியாகச் செல்லவில்லை?

A. ஒடிசா

B. திரிபுரா

C. ஜார்க்கண்ட்

D. மிசோரம்

22. தமிழ்நாட்டு அலையாத்திக் காடுகள் (mangroves) குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:

1. பிச்சாவரம் அலையாத்திக் காடு கடலூர் மாவட்டத்தில் வெள்ளாறு, கொள்ளிடம் கழிமுகங்களுக்கு இடையே உள்ளது.

2. முத்துப்பேட்டை அலையாத்திக் காடு திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது.

3. அலையாத்தித் தாவரங்கள் பெரும்பாலும் உள்நாட்டு நன்னீர் ஏரிகளில் வளர்கின்றன.

மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்

B. 1 மற்றும் 2 மட்டும்

C. 2 மற்றும் 3 மட்டும்

D. 1, 2 மற்றும் 3

23. ஓசோன் படலம் குறித்த பின்வரும் கூற்றுகளைக் கவனிக்கவும்:
1. ஓசோன் படலம் பெரும்பாலும் மீவளிமண்டலத்தில் (stratosphere) உள்ளது.
2. ஓசோனைச் சிதைக்கும் பொருள்களைக் கட்டுப்படுத்த 1987-இல் மாண்ட்ரியல் நெறிமுறை ஏற்கப்பட்டது.
3. மாண்ட்ரியல் நெறிமுறையின் கிகாலி திருத்தம் (2016) HFC வாயுக்களைப் படிப்படியாகக் குறைக்கிறது.
மேற்கண்டவற்றில் சரியானவை எவை?

A. 1 மட்டும்
B. 1 மற்றும் 2 மட்டும்
C. 2 மற்றும் 3 மட்டும்
D. 1, 2 மற்றும் 3

24. ஏரிகளை (பட்டியல் I) அவை அமைந்துள்ள மாநிலம் / ஒன்றியப் பகுதியுடன் (பட்டியல் II) பொருத்துக:
(a) கொல்லேரு – 1. ஒடிசா
(b) லோக்டக் – 2. ஜம்மு–காஷ்மீர்
(c) சிலிக்கா – 3. ஆந்திரப் பிரதேசம்
(d) உலர் (Wular) – 4. மணிப்பூர்

A. (a)-1, (b)-4, (c)-3, (d)-2
B. (a)-3, (b)-4, (c)-1, (d)-2
C. (a)-3, (b)-2, (c)-1, (d)-4
D. (a)-4, (b)-3, (c)-1, (d)-2

25. தமிழ்நாட்டையும் இலங்கையின் யாழ்ப்பாணத் தீபகற்பத்தையும் பிரிக்கும் நீர்ப்பகுதி எது?

A. பாக் நீரிணை
B. பத்து டிகிரிக் கால்வாய்
C. கட்ச் வளைகுடா
D. ஒன்பது டிகிரிக் கால்வாய்

26. ₹8,000-க்கு ஆண்டுக்கு 6% தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டுகளுக்கான வட்டி எவ்வளவு?

A. ₹1,240
B. ₹1,440
C. ₹1,480
D. ₹1,640

SHANMUGAM IAS ACADEMY
www.shanmugamiasacademy.in

27. ஒரு குறியீட்டு மொழியில் CAT என்பது DBU என எழுதப்பட்டால், DOG எப்படி எழுதப்படும்?

A. EPI

B. EPH

C. DPH

D. FQI

28. ஒரு சிறுவனைச் சுட்டிக்காட்டி மீனா, "இவன் என் தந்தையின் ஒரே மகனுடைய மகன்" என்றாள். அச்சிறுவன் மீனாவுக்கு என்ன உறவு?

A. சகோதரன்

B. மகன்

C. சகோதரனின் மகன் (அண்ணன் / தம்பி மகன்)

D. ஒன்றுவிட்ட சகோதரன்

29. 2026 ஜனவரி 1 வியாழக்கிழமை எனில், 2027 ஜனவரி 1 என்ன கிழமை?

A. வியாழன்

B. சனி

C. வெள்ளி

D. புதன்

30. தொடரில் அடுத்த எண் எது? 3, 8, 15, 24, 35, ?

A. 46

B. 48

C. 49

D. 50

விடைகள், விளக்கம்

1. **D) 1, 2 மற்றும் 3** – மூன்றும் சரி. ஹொய்சாளர் தலைநகர் துவாரசமுத்திரம் (ஹளேபீடு). விஷ்ணுவர்த்தனன் பேலூர் சென்னகேசவர் கோயிலைக் கட்டினார். மென்மையான சோப்புக்கல்லில் நட்சத்திர வடிவ மேடைமீது அமைந்த இக்கோயில்கள் 2023-இல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியச் சின்னங்களாயின.

2. **A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம்** – இரண்டும் சரி; (R) சரியான விளக்கம். ராஷ்டிரகூட மன்னர் முதலாம் கிருஷ்ணர் காலத்தில் (8-ஆம் நூற்றாண்டு) ஒரே பாறையை மேலிருந்து கீழாகச் செதுக்கி இக்கோயில் அமைக்கப்பட்டதால்தான் அது ஒற்றைக்கல் கோயில்.

3. **C) 2 மற்றும் 3 மட்டும்** – கூற்று 1 தவறு: சபை 1875-இல் நியூயார்க்கில் பிளாவட்ஸ்கி அம்மையார், ஹென்றி ஸ்டீல் ஆல்காட் ஆகியோரால் தொடங்கப்பட்டது. 1882-இல் தலைமையகம் அடையாற்றுக்கு மாறியது; ஆல்காட் மறைவுக்குப் பின் 1907-இல் அன்னி பெசன்ட் தலைவரானார்.

4. **B) (a)-3, (b)-4, (c)-2, (d)-1** – வ.உ.சி. – ஒட்டப்பிடாரம் (தூத்துக்குடி மாவட்டம்); பாரதியார் – எட்டயபுரம்; வாஞ்சிநாதன் – செங்கோட்டை (1911-இல் ஆஷ் கொலை); திருப்பூர் குமரன் – சென்னிமலை (1932 கொடி காத்த குமரன்).

5. **B) 1 மற்றும் 2 மட்டும்** – கூற்று 3 தவறு: ஒப்பந்தம் 1931 மார்ச் 5 அன்று கையெழுத்தானது; வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகள் விடுதலை பெற்றனர். ஆனால் பகத் சிங், ராஜகுரு, சுகதேவ் 1931 மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டனர்.

6. **B) (a)-2, (b)-3, (c)-4, (d)-1** – 243K – மாநிலத் தேர்தல் ஆணையம் (ஊராட்சித் தேர்தல்); 300A – சொத்துரிமை (44-ஆவது திருத்தம், 1978 முதல் சட்ட உரிமை); 338 – பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையம்; 350A – தொடக்க நிலையில் தாய்மொழியில் கல்வி வசதி.

7. **A) 1 மட்டும்** – கூற்று 1 மட்டும் சரி. ஐந்து மண்டலக் குழுக்களுக்கும் மத்திய உள்துறை அமைச்சரே தலைவர். வடகிழக்கு மாநிலங்கள் இவற்றில் இல்லை; அவற்றுக்கு 1971 சட்டத்தின்படி தனி வடகிழக்குக் குழு (North Eastern Council) உள்ளது.

8. **D) 1, 2 மற்றும் 3** – மூன்றும் சரி. RBI சட்டம் 1934 (2016 திருத்தம்) பிரிவு 45ZB-இன் கீழ் அமைந்த இக்குழுவில் ஆளுநர் உள்பட RBI-இன் மூவர், மத்திய அரசு நியமிக்கும் மூவர் என ஆறு பேர். ரெப்போ விகிதத்தை இக்குழு தீர்மானிக்கிறது; பணவீக்க இலக்கு 4% (±2%).

9. **B) 1 மற்றும் 2 மட்டும்** – கூற்று 3 தவறு: தொடக்கத்தில் எட்டாம் அட்டவணையில் 14 மொழிகள் இருந்தன; திருத்தங்கள் மூலம் இப்போது 22 (கடைசியாக 92-ஆவது திருத்தம், 2003-இல் போடோ, டோக்ரி, மைதிலி, சந்தாலி). கூற்றுகள் 1, 2 பிரிவு 343(1)-இன்படி சரி.

10. **C) ஆளுநர் பதவிக்குக் குறைந்தபட்ச வயது 30** – குறைந்தபட்ச வயது 35 (பிரிவு 157) – எனவே மூன்றாவது தவறு. நியமனம் – பிரிவு 155; குடியரசுத் தலைவர் விருப்பம் – பிரிவு 156; ஒருவரே பல மாநிலங்களுக்கு ஆளுநர் – 7-ஆவது திருத்தம் (1956).

11. **D) 1, 2 மற்றும் 3** – மூன்றும் சரி. ஆதித்யா-L1 2023 செப்டம்பர் 2 அன்று PSLV-C57 மூலம் ஏவப்பட்டு, 2024 ஜனவரி 6 அன்று L1 புள்ளியைச் சுற்றும் ஒளிவட்டப் பாதையில் (halo orbit) நிலைநிறுத்தப்பட்டது. L1 – பூமியிலிருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீ.

12. **C) 2 மற்றும் 3 மட்டும்** – கூற்று 1 தவறு: முன்னாள் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனாவுக்குப் பிறகு நிலவில் மென்தரையிறக்கம் செய்த நான்காவது நாடு இந்தியா; தென்துருவப் பகுதிக்கு அருகே இறங்கிய முதல் நாடு. தரையிறங்கிய இடம் "சிவசக்தி முனை"; ஆகஸ்ட் 23 தேசிய விண்வெளி நாள்.

13. **A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம்** – இரண்டும் சரி; (R) சரியான விளக்கம். சிவப்பணுக்களில் A, B, Rh(D) தூண்டிகள் இல்லாததால், O நெகட்டிவ் சிவப்பணுக்களைப் பெறுபவரின் உடல் பொதுவாக அவற்றை எதிர்ப்பதில்லை; எனவே அவசர நேரத்தில் எந்த வகையினருக்கும் செலுத்தலாம்.

14. **C) 7.4** – மனித இரத்தத்தின் pH சுமார் 7.35–7.45 – அதாவது சற்றுக் காரத்தன்மை (சுமார் 7.4). பைகார்பனேட் தாங்கல் அமைப்பு, நுரையீரல், சிறுநீரகங்கள் இதைச் சீராக வைக்கின்றன; இந்த வரம்பைவிடக் குறைந்தால் அமிலமிகை (acidosis), கூடினால் காரமிகை (alkalosis).

15. **B) 1 மற்றும் 2 மட்டும்** – கூற்று 3 தவறு: வெப்பநிலை உயரும்போது அதிக மின்னூட்டக் கடத்திகள் விடுபடுவதால் குறைகடத்தியின் மின்தடை குறைகிறது (உலோகங்களில் அதிகரிக்கும்). ஐந்து இணைதிறன் கொண்ட பாஸ்பரஸ் கூடுதல் எலக்ட்ரானைத் தருவதால் n-வகை உருவாகிறது.

16. **D) 1, 2 மற்றும் 3** – மூன்றும் சரி. 101-ஆவது அரசியலமைப்புத் திருத்தம் (2016) பிரிவு 279A-ஐச் சேர்த்து GST மன்றத்தை அமைத்தது. மத்திய நிதியமைச்சர் தலைவர்; மாநில நிதியமைச்சர்கள் உறுப்பினர்கள். 3/4 எடைப் பெரும்பான்மை – மத்திய அரசு 1/3, மாநிலங்கள் 2/3.

17. **D) 1, 2 மற்றும் 3** – மூன்றும் சரி. RBI வழிகாட்டுதல்படி உள்நாட்டு வணிக வங்கிகளுக்கு மொத்த இலக்கு ANBC-இல் 40%. வேளாண்மை, குறு–சிறு–நடுத்தரத் தொழில்கள், ஏற்றுமதிக் கடன், கல்வி, வீட்டுவசதி, சமூகக் கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவை முன்னுரிமைத் துறையில் அடங்கும்.

18. **C) சரக்கு, சேவை வரி (GST)** – GST ஒரு மறைமுக வரி – வரிச்சுமை நுகர்வோரிடம் மாற்றப்படுகிறது. வருமான வரி, நிறுவன வரி, பங்குப் பரிவர்த்தனை வரி ஆகியவை மத்திய நேர்முக வரி வாரியத்தால் (CBDT) நிர்வகிக்கப்படும் நேர்முக வரிகள்.

19. **A) (a)-3, (b)-4, (c)-2, (d)-1** – இந்தியச் சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) – லக்னோ; தேசிய வீட்டுவசதி வங்கி – புது தில்லி; காப்பீட்டு ஒழுங்குமுறை, வளர்ச்சி ஆணையம் (IRDAI) – ஹைதராபாத்; வேளாண், ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) – மும்பை.

20. **A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்குச் சரியான விளக்கம்** – இரண்டும் சரி; (R) சரியான விளக்கம். சார்ந்திருப்போரைவிட உழைக்கும் வயதினர் அதிகமாக இருக்கும்போது சேமிப்பு, உற்பத்தி, வளர்ச்சி உயரும் வாய்ப்பே மக்கள்தொகை ஈவு; ஆனால் கல்வி, திறன், வேலைவாய்ப்பு இருந்தால்தான் அது பலன் தரும்.

21. **A) ஒடிசா** – கடகரேகை (சுமார் 23½° வ) குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், திரிபுரா, மிசோரம் ஆகிய எட்டு மாநிலங்கள் வழியாகச் செல்கிறது; ஒடிசா வழியாக அல்ல.

22. **B) 1 மற்றும் 2 மட்டும்** – கூற்று 3 தவறு: அலையாத்திகள் கடல் நீரும் ஆற்று நீரும் கலக்கும் உவர்நீர்க் கழிமுக, கடலோரப் பகுதிகளில் வளர்கின்றன; உப்பைத் தாங்கும், மூச்சு வேர்கள் உண்டு. பிச்சாவரம் (கடலூர்), முத்துப்பேட்டை (திருவாரூர்) தமிழ்நாட்டின் முக்கிய அலையாத்திக் காடுகள்.

23. **D) 1, 2 மற்றும் 3** – மூன்றும் சரி. ஓசோன் படலம் மீவளிமண்டலத்தில் சூரியனின் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சுகிறது. மாண்ட்ரியல் நெறிமுறை (1987) CFC போன்றவற்றைக் கட்டுப்படுத்தியது; கிகாலி திருத்தம் (2016) வெப்பமயமாக்கும் HFC வாயுக்களைக் குறைக்கிறது. உலக ஓசோன் நாள் – செப்டம்பர் 16.

24. **B) (a)-3, (b)-4, (c)-1, (d)-2** – கொல்லேரு – ஆந்திரம் (கோதாவரி, கிருஷ்ணா டெல்டாக்களுக்கு இடையே நன்னீர் ஏரி); லோக்டக் – மணிப்பூர் (மிதக்கும் "பும்டி" தீவுகள்); சிலிக்கா – ஒடிசா (இந்தியாவின் பெரிய உவர்நீர் ஏரி); உலர் – ஜம்மு–காஷ்மீர் (பெரிய நன்னீர் ஏரிகளில் ஒன்று).

25. **A) பாக் நீரிணை** – பாக் நீரிணை தமிழ்நாட்டையும் இலங்கையின் வடக்குப் பகுதியையும் (யாழ்ப்பாணம்) பிரிக்கிறது; வங்கக் கடலைப் பாக் விரிகுடாவுடன் இணைக்கிறது. பத்து டிகிரிக் கால்வாய் அந்தமானையும் நிக்கோபாரையும், ஒன்பது டிகிரிக் கால்வாய் இலட்சத்தீவுகளில் மினிக்காய்க்கு வடக்கேயும் உள்ளன.

26. **B) ₹1,440** – தனிவட்டி = அசல் × வீதம் × காலம் ÷ 100 = 8,000 × 6 × 3 ÷ 100 = ₹1,440.

27. **B) EPH** – ஒவ்வோர் எழுத்தும் அடுத்த எழுத்தாக மாறுகிறது (+1): C → D, A → B, T → U. எனவே D → E, O → P, G → H – EPH.

28. **C) சகோதரனின் மகன் (அண்ணன் / தம்பி மகன்)** – மீனா பெண் என்பதால் அவள் தந்தையின் ஒரே மகன் மீனாவின் சகோதரன். அவனுடைய மகன் மீனாவுக்குச் சகோதரனின் மகன் (nephew).

29. **C) வெள்ளி** – 2026 லீப் ஆண்டு அல்ல – 365 நாள் = 52 வாரம் + 1 நாள். எனவே கிழமை ஒரு நாள் முன்னேறும்: வியாழன் → வெள்ளி.

30. **B) 48** – வேறுபாடுகள் 5, 7, 9, 11 – அடுத்தது 13; 35 + 13 = 48. (அல்லது $n^2 - 1$: 2^2-1, 3^2-1, … $7^2-1 = 48$.)

Shanmugam IAS Academy – அடுத்த படி

- **வகுப்புகள்:** TNPSC குரூப் 1, 2 / 2A (Prelims + Mains), குரூப் 4, UPSC / IAS, வங்கி, SSC, SI – கோவை · மதுரை · ஆன்லைன் – https://www.shanmugamiasacademy.in/fees
- **நூல்கள் (PDF):** TNPSC PYQ நூல்கள், பொதுத் தமிழ் முழுமையான நூல், UPSC நூல்கள் – https://www.shanmugamiasacademy.in/study-materials
- **மேலும் இலவச PDF:** https://www.shanmugamiasacademy.in/free-pdf-download · இந்தப் பக்கம்: https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-2-2a-mains

சேர்க்கைக்கு அழைக்க / WhatsApp: 99941 46662 · 99944 27714 · www.shanmugamiasacademy.in